செ.வெ.எண் -47 நாள்:26.02.2018

# அரியலூரில் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (26.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, அம்மா இருசக்கர வாகனம், இலவச வீட்டுமனைப்பட்டா, தொகுப்பு வீடுகள், திருமண நிதியுதவித் திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **253** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரெட்டிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமி, த.பெ.பிச்சைப்பிள்ளை என்பவர் தண்டுவடம் பாதிக்கப்பட்டதற்காக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளித்த கோரிக்கையினை ஏற்று, ரூ.20,000/- மதிப்பிலான சக்கர நாற்காலியினையும், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புதிட்டம்) ஜெ.பாலாஜி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் ஆர்.பாலாஜி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**